# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 ஜுன் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 15.06.2018–ந் தேதி மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் : 1**

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான கீழ்க்காணும் தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் 2018–19 ஆம் ஆண்டுக்கு விநியோகம் செய்வதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.368 நாள் 30.04.2018–ன் படி அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தெருமின் விளக்குகள் பராமரிப்பு பொருட்கள் விநியோகம் செய்வதற்கு 12.06.2018 அன்று வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்த புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **பொதுநிதி 2018–19** | | | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு பாரமரிப்பு உதிரி பொருள்கள் 2018–19 ஆம் ஆண்டுக்கு விநியோகம் செய்தல் | 8.50 | 1) ஜீ,வி ஏஜென்ஸிஸ்,மதுரை | மதிப்பீட்டு தொகைக்கு 0.15% குறைவு |
| | | | 2) விகாஸ் ஏஜென்ஸிஸ், மதுரை | மதிப்பீட்டு தொகைக்கு 1.10% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு தொகையை விட 0.15% குறைவாக கொடுத்துள்ள ஜீ,வி ஏஜென்ஸிஸ்,மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.385** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

இந்நகராட்சியின் 2016–2017–ம் ஆண்டுக்குரிய இயல்நிலை கணக்குகள் வரவு செலவீனஙகள் (Receipt & Expentiture ) ஐந்தொகை கணக்குகள் (Trail Balance), இருப்பு நிலை விபரம் ( Balance Sheet ) ஆகியவைகள் பழைய நான்கு இலக்க இயல்பு நிலை கணக்கு முறையிலும் (ABAS–FAS) புதிய ஏழு இலக்க முறையிலும் (CWBS) தயார் செய்து தணிக்கைக்கு அளிக்கும் பொருட்டு நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ABA System கண்சலண்ட் திரு.வி.சீனிவாசன் எம்.காம்.சி.ஏ கோவில்பட்டி என்பவருக்கு கட்டணம் ரூ. 35,000/– மட்டும் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.இ1 / 319 /2017)**

**அலுவலக குறிப்பு**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ 35,000/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழஙக மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.386</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

கீழக்கரை நகராட்சி 21 வார்டுகளை கொண்டது, 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்டி, 38355 ஆகும். தற்பொழுது உள்ள மக்கள்தொகையின் அடிப்படையில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் வீதம் வழஙகிட 34.00 இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவையாக உள்ளது. இதில் தினமும் 2.5MLD வீதம் நபர் ஒருவருக்கு 54 லிட்டர் வீதம் தினமும் குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது. காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தினமும் 1.90 MLD மற்றும் உள்ளூர் நீர் ஆதாரமாக விளஙகும் மாலஙகுண்டு, சேதுக்கரை பகுதிகளில் இருக்கும் திறந்தவெளி கிணறுகளில் இருந்து தினமும் 0.60 MLD ஆக மொத்தம் 2.50 MLD குடிநீர் மட்டுமே வழஙகப்பட்டு வருகிறது. இந்நிலையில் 21–வது வார்டு கொந்த கருணை அப்பா தர்ஹா மணல்மேட்டில் உள்ள 4.00 லட்சம் மற்றும் 1.80 லட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கீழக்கரை நகராட்சி பகுதியில் விநியோகிக்கப்படும் குடிநீர் வழஙகும் நிலையஙகளை பரிசோதனை செய்து வழஙகப்பட்ட அறிக்கையில்,(தலைமை நீர் பரிசோதனை அலுவலர், திருநெல்வேலி மண்டல அவர்களின் எண்.61/எல்/2017,நாள்.17.02.2017) கீழக்கரை நகராட்சி பகுதியில் விநியோகிக்கப்படும் குடிநீர் வழஙகும் 21–வது வார்டு கொந்த கருணை அப்பா தர்ஹா மணல்மேட்டில் அமைந்துள்ள 4.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி மிகவும் பழுதடைந்துள்ளதாகவும் அவற்றை மாற்றி புதிதாக மேல்நிலைத்தொட்டி அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.மேற்காணும் அறிக்கையின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்து பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் வழஙக நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.1141/2012/பி3, நாள்.10.03.2017 –ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீழக்கரை நகராட்சிக்கு காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் நிர்ணயம் செய்யப்பட்ட குடிநீர் அளவு 3.34 MLD(Design Quantity) ஆகும். இந்நகராட்சியில் குடிநீர் சேமிப்பு செய்ய மேல்நிலைத் தொட்டி போதுமானதாக இல்லாத காரணத்தால் 2.50 MLD குடிநீர் மட்டுமே தற்பொழுது வழஙகப்பட்டு வருகிறது. இந்நகர் பகுதி மக்களுக்கு காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் குடிநீர் திட்ட ஆதாரஙகனைக் கொண்டு குடிநீர் சீராகவும் கூடுதலாகவும் வழஙகும் பொருட்டு, மேலும் ஒரு குடிநீர் மேல்நிலைத்தொட்டி அத்தியாவசியமாக தேவைப்படுவதை கருத்தில் கொண்டு, மேற்காணும் இடத்தில் புதிதாக 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலைத் தொட்டி ரூ.110 இலட்சத்தில் அமைப்பதற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கு நிர்வாக அனுமதி மற்றும் அரசு முழு மானியத்துடன் நிதி ஒதுக்கீடு கோருவதற்குரிய கருத்துருவினை சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 222/இ1/2017)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

இந்நகராட்சியில் புதிதாக 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலைத் நீர்தேக்க தொட்டி கட்டுவதற்குரிய செலவீனம் ரூ.110 இலட்சத்தை அரசு முழு மானியமாக ஒதுக்கீடு செய்யும் பொருட்டு நிர்வாக அனுமதி வழஙக கோரும் கருத்துருவினை சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.387</u>** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

கீழக்கரை நகராட்சியின் 2016–2017–ம் ஆண்டு வருவாய் மற்றும் மூல நிதி கணக்குகள் மற்றும் குடிநீர் வடிகால் நிதி மற்றும் இதரக் கணக்குகளுக்கான தணிக்கை அறிக்கை இராமநாதபுரம் உள்ளாட்சி நிதித்தணிக்கை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 158/அ1/2017 நாள் 31.05.2018–ன் படியானது 11.06.2018–ந் தேதி பெறப்பட்டது. மேற்கண்ட தணிக்கை அறிக்கை மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கவும் மேலும் தணிக்கை அறிக்கை பத்தி எண் 32–ல் குறிப்பிட்டுள்ள தணிக்கை கட்டணம் ரூ 50,822/– மட்டும் அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.319/2017/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. 2016–2017–ம் ஆண்டு தணிக்கை அறிக்கை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தணிக்கை கட்டணம் ரூ.50,822/– மட்டும் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.388** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 5**

இந்நகர் மன்ற தீர்மான எண்.301 நாள்.29.12.2017–ன்படி பொதுசுகாதார உபயோகத்திற்கு பயன்படுத்தி வரும் டிப்பர் லாரி மற்றும் டம்பர் பிளசர், மற்றும் டிராக்டர் ஆகிய வாகனங்கள் பழுதடைந்து பழுது நீக்கம் செய்ய இராமநாதபுரம் பணிமனையில் (ஒர்க்ஸ் சாப்) உள்ளதால் ஒரே ஒரு டிராக்டர் TDR 4355 என்ற வாகனம் மட்டுமே இயங்கி குப்பைகள் அள்ளுவதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் இந்நகராட்சி பொதுசுகாதார பணிகளை தொய்வின்றி செய்வதற்கு ஒரு டிராக்டருடன் கூடிய டிரைலர் வாடகை எடுத்து இந்நகர் பொதுசுகாதார பணிக்கு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இந்நகர் மன்ற தீர்மான எண்.303 நாள்.29.12.2017–ன்படி இராமநாதபுரம், ஆர்.எஸ்.பாலமுருகன்,டிராக்டர் ஒர்க்ஸ், 01.01.2018 முதல் 31.03.2018 வரை மூன்றுமாத காலங்களுக்கு வழங்கப்பட்ட பணி உத்திரவினை தொடர்ந்து பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு 01.04.2018 முதல் 30.06.2018 வரை வாடகைக்கு ஒரு டிராக்டர் மற்றும் டிரைலர் பயன்படுத்துவதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.378 நாள்.30.04.2018–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர் அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் இராமநாதபுரம் பணிமனையில் (ஒர்க்ஸ் சாப்) பழுது நீக்கம் செய்ய சென்றுள்ள வாகனங்கள் பழுதுநீக்கம் செய்து இதுநாள்வரை வரவில்லை. ஆகையால் இந்நகராட்சி பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு ஒரு டிராக்டருடன் கூடிய டிரைலர் தொடர்ந்து வாடகைக்கு பயன்படுத்துவதற்கு இவ்வலுலக துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1502/2017/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு வாடகைக்கு ஒரு டிராக்டர் மற்றும் டிரைலர் தொடர்ந்து 01.07.2018 முதல் 30.09.2018 வரை பயன்படுத்துவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.389** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 6**

இந்நகர் மன்ற தீர்மான எண்.328 நாள்.28.02.2018 மற்றும் தீர்மான எண்.348 நாள்.28.03.2018–ந் தேதிய அனுமதிகளின் அடிப்படையில் இந்நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டில் இருந்த வந்த 20 எண்ணம் டம்பர்பிளேசர் பின்களை பழுது நீக்கப்பணிகள் செய்வதற்கு 15.06.2018 அன்று வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்த புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | **பொதுநிதி 2018–19** | | |
| 1. | கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டில் இருந்து வந்த டம்பர்பிளேசர் வாகனத்தின் பின்கள் பழுதுநீக்கம் செய்யும் பணிகள் (20 எண்ணம்) | 5.00 | 1) ஜீ,வி ஏஜென்ஸிஸ்,மதுரை | மதிப்பீட்டு தொகைக்கு 0.20% குறைவு |
| | | | 2) விகாஸ் ஏஜென்ஸிஸ், மதுரை | மதிப்பீட்டு தொகைக்கு 1.50% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு தொகைக்கு 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜீ,வி ஏஜென்ஸிஸ்,மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.390** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 7**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் Lr.No.31810/Tariff Revision/AE II/ O&M/2017 தேதி. 24.04.2018 –ன்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு 01.04.2018 முதல் 31.03.2019 வரை 5% குடிநீர் கட்டணம் (Demand Taiff) மாற்றியமைந்து மிகுதிபடுத்துப்பட்டள்ளது. மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசாணை எண். G.O. M.S. 39 மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் (Demand Taiff Revised) –ன்படி 12/2017 முதல் 03/2018 வரையிலான (Arrear) நிலுவை தொகை கீழ்கண்ட பட்டியலின்படி செலுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| மாதம் | அளவு | திருத்திய கேட்பு 9.00/kl | பழைய கேட்பு 4.50/kl | நிலுவை |
|---|---|---|---|---|
| 12/2017 | 20077$m^3$ | 180693 | 90347 | 90346 |
| 01/2018 | 17420$m^3$ | 156780 | 78390 | 78390 |
| 02/2018 | 19990$m^3$ | 179910 | 89955 | 89955 |
| 03/2018 | 21842$m^3$ | 196578 | 98289 | 98289 |
| | | | மொத்தம் | 356980 |

மேற்காணும், பட்டியலின்படி நிலுவைத் தொகை மற்றும் வருஙகாலஙகளில் தமிழ்நாடு குடிநீர் வாரிய செயற்பொறியாளர் அவர்களிடம் வரப்பெறும் கேட்பு தொகையினையும் செலுத்துவதற்கு இதற்கான செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி ஒப்புதலுக்காக.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.391** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 8**

1998–ஆம் ஆண்டின் தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொழில்வரி விதிகளின் விதி–16–ன் படி 01.10.1999 முதல் துவங்கி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழில்வரி விகிதம் நகர் மன்றங்களினால் ஏற்கெனவே நிர்ணயித்த வரி விகிதங்களுக்கு 01.10.2018 முதல் 25 சதவீதத்திற்கு குறையாமலும் 35 சதவீதத்திற்கு மிகாமலும் உயர்வு செய்ய வேண்டும், எனவே 01.10.2018 முதல் தொழில்வரி சீராய்வு செய்ய கீழ்கண்ட பட்டியலின்படி, மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | சராசரி அரையாண்டு வருமானம் | பழைய அரையாண்டு வரி | 01.10.2018 முதல் திருத்தியமைக்கப்பட்ட புதிய அரையாண்டு வரி 30 சதவீதம் |
|---|---|---|---|
| 1 | ரூ 21000 வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ 21001 முதல் ரூ 30000 வரை | 120.00 | 156.00 |
| 3 | ரூ 30001 முதல் ரூ 45000 வரை | 300.00 | 390.00 |
| 4 | ரூ 45001 முதல் ரூ 60000 வரை | 590.00 | 767.00 |
| 5 | ரூ 60001 முதல் ரூ 75000 வரை | 890.00 | 1157.00 |
| 6 | ரூ 75001 முதல் அதற்கு மேல் | 1175.00 | 1250.00 |

மேலும், 1999–ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி தொழில்வரி விதி–16 –ன்படி மேற்கண்ட நான்கு பட்டியல் இனஙகளுக்கு 30 சதவீதம் உயர்த்தி வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது மற்றும் 5 வது இனத்திற்கு ரூ.75001 முதல் அதற்கு மேல் வரி நிர்ணயம் செய்ய 1250 அடுக்கு விகிதத்தில் இறுதி மதிப்பீடாகும்.

**(கோப்பு எண் இ2/591/2018 )**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.392** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
கீழக்கரை நகராட்சி